அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை-600 001.

# நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு
2023 - 2024

மானியக் கோரிக்கை எண். 34

**கே.என். நேரு**
நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2023

## 6. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் நோக்குடன் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய சட்ட வடிவு, 1970 (தமிழ்நாடு சட்டம் 4-1971) -ன்படி 1971-ஆம் ஆண்டு ஏப்ரல் 14-ஆம் நாள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் உருவாக்கப்பட்டது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை பெருநகர பகுதிகளை தவிர்த்து, தமிழ்நாட்டில் உள்ள ஊரக மற்றும் நகர பகுதிகளில் உள்ள மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கிட குடிநீர் திட்டங்கள் மற்றும் நகர பகுதிகளில் கழிவுநீர் அகற்ற பாதாள சாக்கடைத் திட்டங்களை செயல்படுத்தும் ஒரு பொறியியல் அமைப்பாக செயல்பட்டு வருகிறது.

### வாரிய இயக்குநர்கள்

| தலைவர் | |
|---|---|
| 1 | அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை |

| | |
|---|---|
| இயக்குநர்கள் | |
| 2 | அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நீர்வள ஆதாரத்துறை |
| 3 | அரசு முதன்மை செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை |
| 4 | அரசு முதன்மை செயலாளர், மருத்துவம் – மக்கள் நல்வாழ்வு துறை |
| 5 | மேலாண்மை இயக்குநர், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியம் |
| 6 | ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை |
| 7 | மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் |
| 8 | அரசு கூடுதல் செயலாளர், நிதித்துறை |
| 9 | பேரூராட்சிகளின் இயக்குநர் |
| 10 | நகராட்சி நிருவாக இயக்குநர் |
| 11 | இணை மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் |
| 12 | நிதி இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் |
| 13 | பொறியியல் இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் |



தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் வேலூர், தஞ்சாவூர், கோயம்புத்தூர், மதுரை ஆகிய நான்கு மண்டலங்களாக பிரிக்கப்பட்டு நான்கு தலைமைப் பொறியாளர்கள் தலைமையில் செயல்பட்டு வருகிறது. இந்த மண்டலங்களின் கீழ் செயல்படும் 16 வட்ட அலுவலகங்கள், 85 கோட்ட அலுவலகங்கள் மற்றும் 259 உபகோட்ட அலுவலகங்கள் மூலம் கூட்டுக்குடிநீர் திட்டங்கள், நகர தனிக் குடிநீர் திட்டங்கள் மற்றும் பாதாள சாக்கடை திட்டங்களை வடிவமைத்து செயல்படுத்தியும், கூட்டுக் குடிநீர் திட்டங்களை பராமரித்தும் வருகின்றன.

### 6.1 தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தொலைநோக்குப் பார்வை:

- தமிழ்நாட்டில் உள்ள ஊரக மற்றும் நகர பகுதிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் வகையில் கூட்டுக் குடிநீர் திட்டங்கள் மற்றும் தனிக் குடிநீர்த் திட்டங்களை வடிவமைத்து செயல்படுத்துதல்.
- நகர பகுதிகளுக்கு பாதாள சாக்கடை திட்டங்களை வடிவமைத்து செயல்படுத்துதல்
- ஒன்றுக்கும் மேற்பட்ட உள்ளாட்சி அமைப்புகளை பயனாளிகளாகக் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை பராமரித்து, தேவையான குடிநீரை

ஊரக மற்றும் நகர உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்குதல்.

- நீராதாரங்களின் நீடித்த நிலைத்த தன்மையை உறுதி செய்ய தேவையான நடவடிக்கைகள் எடுத்தல்.

## 6.2 தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் செயல்பாடுகள்

- தமிழ்நாட்டில் உள்ள ஊரக மற்றும் நகர பகுதிகளில் குடிநீர் வழங்கும் பணிகளை திட்டமிடுதல், வடிவமைத்தல், மற்றும் செயல்படுத்துதல்.
- நகர பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டங்களை திட்டமிடுதல், வடிவமைத்தல் மற்றும் செயல்படுத்துதல்.
- கூட்டுக் குடிநீர் திட்டங்களை இயக்குதல் மற்றும் பராமரித்தல்.
- வழங்கப்படும் குடிநீரின் தரத்தினை பரிசோதித்தல் மற்றும் கண்காணித்தல்.
- ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நடவடிக்கைகள்.



## 6.3 2022-23 ஆம் ஆண்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள்

### 6.3.1 கூட்டுக் குடிநீர் திட்டங்கள் / தனிக் குடிநீர் திட்டங்கள்

2022-23 ஆம் ஆண்டில், திருச்சிராப்பள்ளி, கிருஷ்ணகிரி, தேனி, மதுரை, தென்காசி, திருநெல்வேலி, ஈரோடு, நாமக்கல், சேலம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களைச் சார்ந்த 3 நகராட்சிகள், 13 பேரூராட்சிகள் மற்றும் 1,802 ஊரக குடியிருப்புகளில் உள்ள 14.91 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் 11 கூட்டுக் குடிநீர் திட்டங்கள் / தனிக் குடிநீர் திட்டங்கள் நாளொன்றுக்கு 99.59 மில்லியன் லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் வகையில் ரூ.956.74 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இத்திட்டங்களின் விவரங்கள் அட்டவணை 6.1-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 6.1**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | பயன் பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | திருச்சிராப்பள்ளி மாவட்டம்,தொட்டியம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 138 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்திட்டம் (3.26 MLD) | 49.95 | 0.58 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | பயன் பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 2 | கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த சிகரளப்பள்ளி மற்றும் 143 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் ( 1.46 MLD) | 31.82 | 0.41 |
| 3 | தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் நகராட்சி குடிநீர் அபிவிருத்தி திட்டம் (14.36 MLD) | 76.15 | 0.90 |
| 4 | தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் நகராட்சி குடிநீர் அர்ப்பணிப்புத் திட்டம் | 30.00 | |
| 5 | மதுரை மாவட்டம், ஆனையூர் நகராட்சி (தற்போது மதுரை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ளது) குடிநீர் அபிவிருத்தி திட்டம் ( 5.40 MLD) | 8.97 | 0.72 |
| 6 | ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் மற்றும் நம்பியூர் ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 96 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் ( 2.31 MLD) | 56.94 | 0.64 |
| 7 | தென்காசி மாவட்டம், ஆலங்குளம் மற்றும் பாப்பாக்குடி ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 48 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் திருநெல்வேலி மாவட்டம், முக்கூடல் பேரூராட்சியைச் சார்ந்த 1 குடியிருப்பிற்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (3.18 MLD) | 50.50 | 0.50 |



| வ. எண் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | பயன் பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 8 | நாமக்கல் மற்றும் சேலம் மாவட்டம், சங்ககிரி, ஆலம்பாளையம் மற்றும் படவீடு பேரூராட்சிகள், பள்ளிபாளையம், திருச்செங்கோடு ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 669 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (24.28 MLD) | 399.46 | 4.92 |
| 9 | கன்னியாகுமரி மாவட்டம், இரணியல் பேரூராட்சி மற்றும் 319 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் மற்றும் பத்மநாபபுரம், காட்டாத்துறை கூட்டுக் குடிநீர் மேம்பாட்டு திட்டம் (31.81 MLD) | 174.00 | 3.10 |
| 10 | திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் பேரூராட்சி, பாப்பாக்குடி, கடையம் மற்றும் கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 163 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (8.16 MLD) | 46.55 | 1.81 |
| 11 | திருநெல்வேலி மாவட்டம், மானூர் மற்றும் பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 170 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் ( 5.37 MLD) | 32.40 | 1.33 |
| | மொத்தம் (99.59 MLD) | 956.74 | 14.91 |

### 6.3.2 பாதாள சாக்கடைத் திட்டங்கள்

2022–23 ஆம் ஆண்டில், கோயம்புத்தூர், சிவகங்கை, விருதுநகர் மற்றும் தேனி

மாவட்டங்களைச் சார்ந்த 4 நகராட்சிகள் மற்றும் 1 பேரூராட்சியில் உள்ள 3.74 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் 5 பாதாள சாக்கடைத் திட்டங்கள் ரூ.500.54 கோடி மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 42.43 மில்லியன் லிட்டர் கழிவுநீர் சேகரிக்கப்பட்டு சுத்திகரிப்பு செய்யும் வகையில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

முடிக்கப்பட்ட கழிவுநீரகற்று திட்டங்களின் விவரங்கள் அட்டவணை 6.2 ல் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 6.2

| வ. எண். | வட்டம்மா | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் | பொள்ளாச்சி நகராட்சிக்கான பாதாள சாக்கடைத் திட்டம் (11.25 MLD) | 170.22 | 1.00 |
| 2 | சிவகங்கை | காரைக்குடி நகராட்சிக்கான பாதாள சாக்கடைத் திட்டம் (16.00 MLD) | 140.13 | 1.39 |
| 3 | தேனி | மேலசொக்கநாதபுரம் பேரூராட்சிக்கான பாதாள சாக்கடைத் திட்டம் (1.90 MLD) | 41.72 | 0.22 |
| 4 | கோயம்புத்தூர் | மேட்டுப்பாளையம் நகராட்சிக்கான பாதாள சாக்கடைத் திட்டம் (8.65 MLD) | 100.08 | 0.77 |
| 5 | விருதுநகர் | சாத்தூர் நகராட்சிக்கான பாதாள சாக்கடைத் திட்டம் (4.63 MLD) | 48.39 | 0.36 |
| | | மொத்தம் (42.43 MLD) | 500.54 | 3.74 |



### 6.4 செயலாக்கத்தில் உள்ள திட்டங்கள்

#### 6.4.1 குடிநீர் திட்டங்கள்

மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், மற்றும் ஊரகக்குடியிருப்புகள் ஆகியவற்றிற்கு முறையே நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 135, 90, 70 மற்றும் 55 லிட்டர் குடிநீர் வழங்கும் வகையில் குடிநீர் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

##### 6.4.1.1 கூட்டுக் குடிநீர் திட்டங்கள்

தற்பொழுது சிவகங்கை, விருதுநகர், கன்னியாகுமரி, தேனி, கடலூர், சேலம், திருப்பூர், கோயம்புத்தூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம், பெரம்பலூர்,

கிருஷ்ணகிரி, திருநெல்வேலி, ஈரோடு, கரூர், நீலகிரி, திருப்பத்தூர், திருச்சிராப்பள்ளி, இராணிப்பேட்டை, மயிலாடுதுறை, செங்கல்பட்டு, நாமக்கல், திருவள்ளூர் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களைச் சார்ந்த 12 நகராட்சிகள், 24 பேரூராட்சிகள் மற்றும் 9,811 ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூ.7,084.64 கோடி மதிப்பீட்டில், நாளொன்றுக்கு 489.29 மில்லியன் லிட்டர் பாதுகாப்பான குடிநீரை 79.25 இலட்சம் மக்களுக்கு வழங்கும் வகையில் 39 கூட்டுக் குடிநீர் திட்டங்கள் பல்வேறு நிதி ஆதாரங்களைக் கொண்டு வெவ்வேறு நிலைகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மேற்கண்ட 39 கூட்டுக் குடிநீர் திட்டங்களில், 10 திட்டங்கள், தேசிய வேளாண் மற்றும் கிராமப்புர வளர்ச்சி வங்கி (NABARD) மற்றும் குறைந்தபட்ச தேவைகள் திட்ட (MNP) நிதி ஆதாரங்களின் கீழ் 11 மாவட்டங்களில் உள்ள 4 நகராட்சிகள், 21 பேரூராட்சிகள் மற்றும் 6,198 ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூ.3,667.06 கோடி மதிப்பீட்டில் பல்வேறு நிலைகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்கள் நாளொன்றுக்கு 258.30 மில்லியன் லிட்டர் பாதுகாப்பான குடிநீரை



49.02 இலட்சம் மக்களுக்கு வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இத்திட்டங்களின் விவரங்கள் அட்டவணை 6.3-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

### அட்டவணை 6.3

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | பயன் பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | சிவகங்கை மாவட்டம், 8 பேரூராட்சிகள் , 11 ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 2,452 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் 3 நகராட்சிகளுக்கு மொத்த ஒதுக்கீட்டுடன் கூடிய கூட்டுக் குடிநீர் திட்டம் (86.42 MLD) | 1,752.73 | 16.11 |
| 2. | தேனி மாவட்டம், கடமலைக்குண்டு–மயிலாடும்பாறை, ஆண்டிபட்டி மற்றும் தேனி ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 250 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் ( 10.70 MLD ) | 162.43 | 1.78 |
| 3. | கடலூர் மாவட்டம், திட்டக்குடி, பெண்ணாடம், மங்களம்பேட்டை, வடலூர், குறிஞ்சிப்பாடி, கங்கைகொண்டான் பேரூராட்சிகள் மற்றும் மங்களூர், நல்லூர், விருத்தாசலம் ஒன்றியங்களில் உள்ள 625 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (39.43 MLD) | 479.00 | 7.92 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | பயன் பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 4. | சேலம் மாவட்டம், இளம்பிள்ளை, ஆட்டையாம்பட்டி, பனமரத்துப்பட்டி, மல்லூர் மற்றும் இடங்கணசாலை பேரூராட்சிகள் மற்றும் வீரபாண்டி, பனமரத்துப்பட்டி மற்றும் சேலம் ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 778 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (53.03 MLD) | 652.84 | 6.03 |
| 5. | கோயம்புத்தூர் மாவட்டம், அன்னூர், அவிநாசி மற்றும் சூலூர் ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 708 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் திருப்பூர் மாவட்டம், திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 165 ஊரகக் குடியிருப்புகளுக்கு மொத்த ஒதுக்கீட்டுடன் கூடிய கூட்டுக் குடிநீர் திட்டம் ( 36.15 MLD) | 362.20 | 6.43 |
| 6. | தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 134 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் ( 5.45 MLD) | 91.13 | 0.97 |
| 7. | நாகப்பட்டினம் மாவட்டம், 893 ஊரகக் குடியிருப்புகளுக்கான பயன்பாட்டிலுள்ள கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு கூடுதல் நீராதாரம் ஏற்படுத்துவதற்கான திட்டம் (14.93 MLD) | 42.46 | 7.03 |
| 8. | பெரம்பலூர் மாவட்டம், வேப்பூர் ஒன்றியத்தில் உள்ள 73 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (4.05 MLD) | 22.84 | 0.87 |



| வ. எண் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | பயன் பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 9. | கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனப்பள்ளி ஒன்றியத்தை சார்ந்த என்னேகொள்ளு மற்றும் 122 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (2.44 MLD) | 31.00 | 0.54 |
| 10. | திருப்பூர் மாவட்டம், திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 10 ஊராட்சிகளிலுள்ள 165 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் ( 5.70 MLD) | 70.43 | 1.34 |
| | மொத்தம் (258.30 MLD) | 3,667.06 | 49.02 |

தஞ்சாவூர், திருப்பத்தூர், கரூர், ஈரோடு, சேலம், திருச்சிராப்பள்ளி, கன்னியாகுமரி, இராணிப்பேட்டை, திருநெல்வேலி, மயிலாடுதுறை, செங்கல்பட்டு, நாமக்கல், தூத்துக்குடி, பெரம்பலூர் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களைச் சார்ந்த 3,598 ஊரக குடியிருப்புகள் மற்றும் 2 பேரூராட்சிகளுடன் இணைந்த 2 குடியிருப்புகளுக்கு ரூ. 2,423.01 கோடி மதிப்பீட்டில் 25 கூட்டுக் குடிநீர் திட்டங்கள் ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ் பல்வேறு நிலைகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்கள் மூலம் 21.37 இலட்சம் மக்களுக்கு நாளொன்றுக்கு 141.78 மில்லியன் லிட்டர் குடிநீர், 1,74,073

வீட்டிணைப்புகளின் மூலம் வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இத்திட்டங்களின் விவரங்கள் அட்டவணை 6.4-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

### அட்டவணை 6.4

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | பயன் பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம், திருப்பனந்தாள் மற்றும் திருவிடைமருதூர் ஒன்றியங்களைச் சார்ந்த 67 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் திருவிடைமருதூர் & வேப்பத்தூர் பேரூராட்சிகளைச் சார்ந்த 2 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (5.97 MLD) | 117.09 | 1.02 |
| 2 | திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர், ஜோலார்பேட்டை, நாட்றாம்பள்ளி மற்றும் கந்திலி ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 759 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (13.99 MLD) | 182.09 | 2.91 |
| 3 | கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி மற்றும் க.பரமத்தி ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 756 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (16.29 MLD) | 440.63 | 2.09 |
| 4 | ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 442 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (20.50 MLD) | 412.12 | 3.16 |
| 5 | ஈரோடு மாவட்டம், கொடுமுடி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 144 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (3.13 MLD) | 87.68 | 0.50 |



| வ. எண் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | பயன் பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 6 | ஈரோடு மாவட்டம், பவானி ஒன்றியத்தைச் சார்ந்த கவுந்தபாடி ஊராட்சியிலுள்ள 55 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் ( 3.00 MLD) | 17.55 | 0.59 |
| 7 | சேலம் மாவட்டம், ஏற்காடு ஒன்றியம், ஏற்காடு ஊராட்சியைச் சார்ந்த 8 குடியிருப்புகளுக்கான குடிநீர் திட்டம் ( 0.99 MLD) | 12.70 | 0.15 |
| 8 | திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் ஒன்றியத்தைச் சார்ந்த கோம்பை ஊராட்சியிலுள்ள முத்திகிராமம் குடியிருப்புக்கான குடிநீர்த் திட்டம் ( 0.022 MLD) | 0.75 | 0.004 |
| 9 | கன்னியாகுமரி மாவட்டம், குருந்தன்கோடு ஒன்றியம் முட்டம் ஊராட்சியிலுள்ள மூன்று குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (0.22 MLD) | 3.69 | 0.14 |
| 10 | கன்னியாகுமரி மாவட்டம், மூஞ்சிரை ஒன்றியத்தைச் சேர்ந்த தூத்தூர் ஊராட்சியிலுள்ள 5 குடியிருப்புகளுக்கான குடிநீர் திட்டம். (1.51 MLD) | 3.51 | 0.22 |
| 11 | இராணிப்பேட்டை மாவட்டம், காவேரிப்பாக்கம், சோளிங்கர் மற்றும் அரக்கோணம் ஒன்றியங்களைச் சார்ந்த செம்பேடு மற்றும் 88 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் ( 2.98 MLD) | 42.30 | 0.72 |
| 12 | திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி மற்றும் புள்ளம்பாடி ஒன்றியங்களைச் சார்ந்த 109 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் ( 11.26 MLD) | 248.59 | 1.90 |
| 13 | திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் ஒன்றியத்தைச் சார்ந்த வாகைக்குளம் மற்றும் 12 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (1.20 MLD) | 12.05 | 0.16 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | பயன் பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 14 | மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி ஒன்றியத்தைச் சார்ந்த 7 ஊராட்சிகளில் உள்ள 32 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (1.46 MLD) | 36.14 | 0.20 |
| 15 | செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் ஒன்றியத்தைச் சார்ந்த கோவளம் மற்றும் 10 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் ( 0.82 MLD) | 13.62 | 0.14 |
| 16 | நாமக்கல் மாவட்டம், பரமத்தி ஒன்றியத்தில் உள்ள 11 ஊராட்சிகள் மற்றும் மல்லசமுத்திரம், எலச்சிபாளையம் ஒன்றிங்களைச் சார்ந்த 547 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (17.96 MLD) | 284.04 | 2.41 |
| 17 | திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் மற்றும் முசிறி ஒன்றியங்களைச் சார்ந்த கூடப்பள்ளி மற்றும் 97 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (6.80 MLD) | 73.97 | 1.15 |
| 18 | தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் ஒன்றியத்தைச் சார்ந்த பள்ளிபத்து ஊராட்சியில் உள்ள 4 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் ( 0.08 MLD) | 1.08 | 0.01 |
| 19 | திருவள்ளூர் மாவட்டம், திருவாலங்காடு ஒன்றியத்தைச் சார்ந்த நல்லாத்தூர், என்.என்.கண்டிகை மற்றும் பூனிமாங்காடு ஊராட்சிகளில் உள்ள நல்லாத்தூர் மற்றும் 15 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் ( 0.56 MLD) | 4.04 | 0.11 |
| 20 | திருச்சிராப்பள்ளி மாவட்டம், அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த பெட்டவாய்த்தலை ஊராட்சியில் உள்ள மூன்று குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் ( 0.42 MLD) | 3.79 | 0.07 |



| வ. எண் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | பயன் பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 21 | திருச்சிராப்பள்ளி மாவட்டம், தாத்தையங்கார்பேட்டை ஒன்றியத்தைச்சார்ந்த M. புதுப்பட்டி ஊராட்சியில் உள்ள 13 ஊரக குடியிருப்புகளுக்கான குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் ( 1.15 MLD) | 7.24 | 0.11 |
| 22 | பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை ஒன்றியத்தைச் சார்ந்த 15 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (1.81 MLD) | 34.97 | 0.29 |
| 23 | திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணிகண்டம் ஒன்றியத்தைச் சார்ந்த 174 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் (11.71 MLD) | 119.22 | 1.37 |
| 24 | தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர், திருவையாறு, தஞ்சாவூர், ஒன்றியங்களைச் சார்ந்த 214 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் ( 16.78 MLD) | 248.67 | 1.79 |
| 25 | தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் ஒன்றியத்தைச் சார்ந்த 20 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் ( 1.17 MLD) | 15.48 | 0.16 |
| | மொத்தம் (141.78 MLD) | 2,423.01 | 21.37 |

இதர நிதி ஆதாரங்களின் கீழ், விருதுநகர், தென்காசி மற்றும் நீலகிரி மாவட்டங்களைச் சார்ந்த 8 நகராட்சிகள், 1 பேரூராட்சி மற்றும் 15 ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூ. 994.57 கோடி மதிப்பீட்டில் 4 கூட்டுக் குடிநீர் திட்டங்கள் பல்வேறு நிலைகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்கள்

நாளொன்றுக்கு 89.21 மில்லியன் லிட்டர் பாதுகாப்பான குடிநீரை 8.85 இலட்சம் மக்களுக்கு வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இத்திட்டங்களின் விவரங்கள் அட்டவணை 6.5–ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 6.5**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | நிதி ஆதாரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | பயன் பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில், புளியங்குடி நகராட்சிகள், திருவேங்கடம் பேரூராட்சி மற்றும் விருதுநகர் மாவட்டத்தைச் சார்ந்த இராஜபாளையம், சிவகாசி, திருத்தங்கல் நகராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (61.98 MLD) | TNSUDP | 543.20 | 6.20 |
| 2. | விருதுநகர் மாவட்டம். அருப்புக்கோட்டை, சாத்தூர், மற்றும் விருதுநகர் நகராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (26.94 MLD) | HUDCO | 444.71 | 2.60 |
| 3. | நீலகிரி மாவட்டம். குன்னூர் ஒன்றியத்தை சார்ந்த மேலூர் ஊராட்சியில் உள்ள அருகுச்சி மற்றும் 5 இதர குடியிருப்புகளுக்கான குடிநீர் திட்டம் ( 0.18 MLD) | SADP | 1.21 | 0.03 |
| 4. | நீலகிரி மாவட்டம். உதகமண்டலம் ஒன்றியத்தை சார்ந்த மேல்குந்தா ஊராட்சியில் உள்ள கிண்ணக்கோரை மற்றும் 8 குடியிருப்புகளுக்கான குடிநீர் திட்டம் (0.11 MLD) | SADP | 5.45 | 0.016 |
| | மொத்தம் (89.21 MLD) | | 994.57 | 8.85 |



### 6.4.1.2 புதிய கூட்டுக் குடிநீர் திட்டங்கள்

14 மாவட்டங்களைச் சார்ந்த 7 நகராட்சிகள், 20 பேரூராட்சிகள் மற்றும் 10,480 ஊரகக் குடியிருப்புகளிலுள்ள 64.19 இலட்சம் மக்கள் பயன் பெறும் வகையில், ரூ.13,607.98 கோடி மதிப்பீட்டிலான 19 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கு, ஜல் ஜீவன் மற்றும் அம்ருத் 2.0 திட்ட நிதி ஆதாரங்களுடன், அரசின் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு, மக்களின் பயன்பாட்டுக்கு வரும் போது தினசரி 597.46 மில்லியன் லிட்டர் குடிநீர் 11,86,366 வீட்டிணைப்புகள் மூலம் வழங்கப்படும்.

இத்திட்டங்களின் விவரங்கள் அட்டவணை 6.6–ல் கொடுக்கப்பட்டுள்ளன.

## அட்டவணை 6.6

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | பயன் பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | திருவாரூர் மாவட்டம் நன்னிலம், மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி, கோட்டூர், திருவாரூர் மற்றும் கொரடாச்சேரி ஆகிய 6 ஒன்றியங்களில் உள்ள 667 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (32.55 MLD) | 1,127.20 | 3.97 |
| 2 | திருநெல்வேலி மாவட்டம் மானூர் ஒன்றியத்தில் உள்ள கங்கை கொண்டான் மற்றும் 21 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (1.86 MLD) | 19.25 | 0.25 |
| 3 | நாமக்கல் மாவட்டம் இராசிபுரம் நகராட்சி, 8 பேரூராட்சிகள், இராசிபுரம், வெண்ணந்தூர், நாமகிரிப்பேட்டை மற்றும் புதுச்சத்திரம் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 523 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் எலச்சிப்பாளையம், மல்லசமுத்திரம் மற்றும் பரமத்தி ஒன்றியங்களுக்குட்பட்ட 547 குடியிருப்புகளுக்கான மொத்த ஒதுக்கீட்டுடன் கூடிய கூட்டுக் குடிநீர் திட்டம் (பகுதி I) (86.04 MLD) | 854.37 | 4.36 |
| 4 | திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை ஒன்றியத்தைச் சார்ந்த 41 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (4.12 MLD) | 45.10 | 0.33 |
| 5 | மதுரை மாவட்டம். கொட்டாம்பட்டி மற்றும் மேலூர் ஒன்றியங்களில் உள்ள 88 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் (6.46 MLD) | 127.18 | 1.31 |
| 6 | மதுரை மாவட்டம். டி.கல்லுப்பட்டி மற்றும் சேடப்பட்டி ஒன்றியங்களில் உள்ள 236 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் மேம்பாட்டுத்திட்டம் (8.80 MLD) | 240.45 | 1.74 |
| 7 | தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் மற்றும் அம்மாப்பேட்டை ஒன்றியங்களைச் சார்ந்த 252 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (17.81 MLD) | 288.02 | 2.09 |
| 8 | நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் நகராட்சி, 4 பேரூராட்சிகள் மற்றும் 6 ஒன்றியங்களைச் சார்ந்த 980 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (93.00 MLD) | 1,752.00 | 7.57 |
| 9 | மதுரை மாவட்டம், 7 ஒன்றியங்களைச் சார்ந்த 867 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (60.00 MLD) | 1,559.07 | 7.12 |
| 10 | ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஒன்றியம், 22 ஊராட்சிகளிலுள்ள 434 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (14.20 MLD) | 482.36 | 1.52 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | பயன் பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 11 | திருநெல்வேலி மாவட்டம், 6 ஒன்றியங்களை சார்ந்த 831 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (22.79 MLD) | 605.75 | 2.59 |
| 12 | விருதுநகர் மாவட்டம், 8 ஒன்றியங்களில் உள்ள 1,286 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் தூத்துக்குடி மாவட்டம் 2 ஒன்றியங்களில் உள்ள 45 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (45.90 MLD) | 1,387.73 | 7.25 |
| 13 | தூத்துக்குடி மாவட்டம், 6 ஒன்றியங்களை சார்ந்த 363 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டு குடிநீர் திட்டம் ( 16.57 MLD) | 515.72 | 3.05 |
| 14 | திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி மற்றும் ஆர்.கே.பேட்டை ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள செருக்கனூர் மற்றும் 114 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் சிட்டம் (2.76 MLD) | 44.58 | 0.42 |
| 15 | கடலூர் மாவட்டம், சிதம்பரம் நகராட்சி, அண்ணாமலை நகர் பேரூராட்சி மற்றும் 2 ஒன்றியங்களைச் சார்ந்த 10 ஊராட்சிகளில் உள்ள 36 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (17.17 MLD) | 255.64 | 1.28 |



| வ. எண் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | பயன் பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 16 | இராமநாதபுரம் மாவட்டம் 2 நகராட்சிகள், 5 பேரூராட்சிகள் மற்றும் 11 ஒன்றியங்களில் உள்ள 2,306 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் நகராட்சி, 2 பேரூராட்சிகள் மற்றும் 7 ஒன்றியங்களில் உள்ள 1,366 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (158.38 MLD) | 4,187.84 | 18.86 |
| 17 | திருவள்ளூர் மாவட்டம், பூண்டி ஊராட்சி ஒன்றியம் 2 ஊராட்சிகளைச் சார்ந்த வேளகாபுரம் மற்றும் 10 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (0.25 MLD) | 3.18 | 0.04 |
| 18 | திருவள்ளூர் மாவட்டம், பூண்டி ஊராட்சி ஒன்றியம் 2 ஊராட்சிகளைச் சார்ந்த அம்மம்பாக்கம் மற்றும் 10 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் (0.23 MLD) | 3.64 | 0.05 |
| 19 | திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் நகராட்சிக்கான குடிநீர் திட்டம் (8.57 MLD) | 108.90 | 0.39 |
| | மொத்தம் (597.46 MLD) | 13,607.98 | 64.19 |

### 6.4.1.3 2022-2023ஆம் ஆண்டில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க எடுத்துக் கொள்ளப்பட்ட கூட்டுக் குடிநீர் திட்டங்கள்

திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த களக்காடு நகராட்சி மற்றும் 7 பேரூராட்சிகளிலுள்ள 1.79 இலட்சம் மக்கள் பயன் பெறும் வகையிலான கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு ரூ.490.00 கோடிக்கு விரிவான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, நிதி ஆதாரம் மற்றும் அரசின் நிர்வாக ஒப்புதல் பெற நடவடிக்கையில் உள்ளது.

### 6.4.2 தனிக் குடிநீர் திட்டங்கள்

மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கான தனிக் குடிநீர் திட்டப் பணிகளை நடைமுறைப்படுத்தும் அமைப்பாகவும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் செயலாற்றி வருகிறது. திட்டங்கள் முடிந்தவுடன் அவை இயக்கம் மற்றும் பராமரிப்புக்காக அந்தந்த நகர உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைக்கப்படுகின்றன.

### 6.4.2.1 அடல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றத்திற்கான திட்டம் (அம்ருத்)

அம்ருத் திட்டத்தின் கீழ், 8 குடிநீர் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, 5 திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 3 குடிநீர் திட்டங்கள் ரூ. 1,563.65 கோடி மதிப்பீட்டில் பல்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன. இத்திட்டங்கள், 36.69 இலட்சம் மக்களுக்கு நாளொன்றுக்கு 367.73 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

நடைபெற்று வரும் திட்டங்களின் விவரங்கள் அட்டவணை 6.7-ல் கொடுக்கப்பட்டுள்ளன.



அட்டவணை 6.7

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | பயன் பெறும் மக்கள் தொகை (இலட்சத் தில்) |
|---|---|---|---|
| 1. | நாகர்கோயில் மாநகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம் ( 49.56 | 296.08 | 3.90 |
| 2. | பவானி ஆற்றினை நீர் ஆதாரமாக கொண்டு புதிதாக இணைக்கப்பட்ட பகுதியினை உள்ளடக்கிய விரிவுபடுத்தப்பட்ட கோயம்புத்தூர் மாநகராட்சிக்கான குடிநீர் அபிவிருத்தி திட்டம் – பில்லூர் – III ( 318.17 MLD) | 779.86 | 32.79 |
| 3 | கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட 8 பகுதிகளுக்கான குடிநீர் அபிவிருத்தித் திட்டம் (பகிர்மான குழாய் அமைப்பு மட்டும்) | 487.71 | -- |
| | மொத்தம் (367.73MLD) | 1563.65 | 36.69 |

### 6.4.2.2 வெளிப்புற நிதி உதவி திட்டங்கள் (EAP) (Externally Aided Projects, KfW– ஜெர்மன் மேம்பாட்டு வங்கி )

வெளிப்புற நிதியுதவி திட்டங்களின் கீழ், திருநெல்வேலி மாநகராட்சிக்கான குடிநீர் அபிவிருத்தி திட்டம் ரூ.295 கோடி மதிப்பீட்டில் 6.88 இலட்சம் மக்கள் நாளொன்றுக்கு 50 மில்லியன் லிட்டர் குடிநீர் பெறும் வகையில் செயலாக்கத்தில் உள்ளது.

### 6.4.2.3 இதர நிதி ஆதாரத் திட்டங்கள்

இதர நிதி ஆதாரத் திட்டங்களின் கீழ் தேனி, மதுரை, கன்னியாகுமரி, திருவள்ளூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களைச் சார்ந்த 3 நகராட்சிகள் மற்றும் 2 பேரூராட்சிகளுக்கு ரூ. 240.08 கோடி மதிப்பீட்டில் 5 குடிநீர் அபிவிருத்தி திட்டங்கள் பல்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன. இத்திட்டப் பணிகள் முடிவுறும் போது 2.34 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் நாளொன்றுக்கு 28.79 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்படும்.

இத்திட்டங்களின் விவரங்கள் அட்டவணை 6.8–ல் கொடுக்கப்பட்டுள்ளன.



அட்டவணை 6.8

| வ. எண் | திட்டத்தின் பெயர் | நிதி ஆதாரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | தேனி மாவட்டம், தென்கரை பேரூராட்சி குடிநீர் அபிவிருத்தி திட்டம் (2.00 MLD) | NABARD | 13.31 | 0.28 |
| 2 | மதுரை மாவட்டம், உசிலம்பட்டி நகராட்சி குடிநீர் அபிவிருத்தி திட்டம் ( 9.98 MLD) | IUDM | 73.03 | 0.64 |
| 3 | கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை நகராட்சி குடிநீர் அபிவிருத்தி திட்டம் (4.83 MLD) | IUDM | 30.94 | 0.31 |
| 4 | திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி நகராட்சி குடிநீர் அபிவிருத்தி திட்டம் (9.44 MLD) | IUDM | 109.68 | 0.85 |
| 5 | ஈரோடு மாவட்டம், சிவகிரி பேரூராட்சி குடிநீர் அபிவிருத்தி திட்டம் ( 2.54 MLD) | O&M GFF | 13.12 | 0.26 |
| | மொத்தம் (28.79MLD) | | 240.08 | 2.34 |

## 6.5 பாதாள சாக்கடைத் திட்டங்கள்

### 6.5.1 செயலாக்கத்தில் உள்ள பாதாள சாக்கடைத் திட்டங்கள்

#### 6.5.1.1 அடல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றங்களுக்கான திட்டம் (அம்ரூத்):

ரூ.1,060.49 கோடி மதிப்பீட்டில் 4 பாதாள சாக்கடைத் திட்டங்கள் பல்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன. இத்திட்டங்களால்

கோயம்புத்தூர் மாநகராட்சி (பகுதி) மற்றும் 3 நகராட்சிகளில் உள்ள 9.63 இலட்சம் மக்கள் பயனடைவர். மேலும் இத்திட்டங்கள் மூலம் நாளொன்றுக்கு 73.17 மில்லியன் லிட்டர் கழிவுநீரை சேகரித்து சுத்திகரிப்பு செய்யப்படும்.

இத்திட்டங்களின் விவரங்கள் அட்டவணை 6.9– ல் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 6.9

| வ. எண். | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூர் நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டம் ( 16.71 MLD ) | 165.55 | 1.83 |
| 2 | விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டம் (21.85 MLD) | 251.20 | 2.20 |
| 3 | கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் மாநகராட்சி (குறிச்சி மற்றும் குனியமுத்தூர்) பாதாள சாக்கடைத் திட்டம் (30.53 MLD) | 591.14 | 5.17 |
| 4 | இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டம் (4.08 MLD) | 52.60 | 0.43 |
| | மொத்தம் (73.17 MLD) | 1,060.49 | 9.63 |



### 6.5.1.2 வெளிப்புற நிதி உதவி திட்டங்கள் (Externally Aided Projects, KfW–ஜெர்மன் மேம்பாட்டு வங்கி )

வெளிப்புற நிதி உதவி திட்டங்களின் கீழ் கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட கவுண்டம்பாளையம், துடியலூர், வடவள்ளி மற்றும் வீரகேரளம் ஆகிய பகுதிகளுக்கான பாதாள சாக்கடைத் திட்டம் ரூ.860.80 கோடி மதிப்பீட்டில் செயலாக்கத்தில் உள்ளது. இத்திட்டம் முடிவுற்ற பின், 3.16 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில், நாளொன்றுக்கு 34.92 மில்லியன் லிட்டர் கழிவுநீர் சேகரிக்கப்பட்டு நிர்ணயிக்கப்பட்ட தரத்திற்கு சுத்திகரிப்பு செய்யப்படும்.

### 6.5.1.3 இதர நிதி ஆதார பாதாள சாக்கடைத் திட்டங்கள்:

கன்னியாகுமரி, தூத்துக்குடி, விழுப்புரம், திருவள்ளூர், மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களைச் சார்ந்த 2 மாநகராட்சிகள், 3 நகராட்சிகள் மற்றும் 1 பேரூராட்சி பயன்பெறும் வகையில் ரூ.895.88 கோடி மதிப்பீட்டில் 6 பாதாள சாக்கடைத் திட்டங்கள் இதர நிதி ஆதாரங்களின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டு பல்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன. இத்திட்டங்கள் முடிவுற்றபின், 4.58 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில், நாளொன்றுக்கு 52.80 மில்லியன் லிட்டர்

கழிவுநீர் சேகரிக்கப்பட்டு நிர்ணயிக்கப்பட்ட தரத்திற்கு சுத்திகரிப்பு செய்யப்படும்.

இத்திட்டங்களின் விவரங்கள் அட்டவணை 6.10–ல் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 6.10

| வ. எண் | திட்டத்தின் பெயர் | நிதி ஆதாரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத் தில்) |
|---|---|---|---|---|
| 1 | கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சி பாதாள சாக்கடைத் திட்டம் (17.66 MLD) | UIDSS MT | 129.95 | 1.54 |
| 2 | தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி மாநகராட்சி வளர்ச்சி சார்ந்த பகுதிகளுக்கான பாதாள சாக்கடைத் திட்டம் (6.25 MLD) | Smart Cities Mission | 120.53 | 0.54 |
| 3 | விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம் நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டம்.(இணைக்கப்பட்ட பகுதி) (6.91 MLD) | HUDCO | 263.00 | 0.60 |
| 4 | விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டம் (11.44 MLD) | HUDCO | 268.00 | 1.00 |
| 5 | திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டம். ( 6.52 MLD) | IUDM | 62.82 | 0.57 |
| 6 | செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் பேரூராட்சி பாதாள சாக்கடைத் திட்டம் (4.02 MLD) | IUDM | 51.58 | 0.33 |
| | மொத்தம் (52.80 MLD) | | 895.88 | 458 |



### 6.5.2 புதிய பாதாள சாக்கடைத் திட்டங்கள்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம், கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட வெள்ளக்கிணறு, சின்னவேடம்பட்டி மற்றும் சரவணம்பட்டி (பகுதி) பகுதிகள் (மண்டலம்–VI), ஓசூர் மாநகராட்சி மற்றும் தூத்துக்குடி மாநகராட்சியின் விடுபட்ட மற்றும் விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில், பகுதி சார்ந்த வளர்ச்சி அல்லாத (Non Area Based Development) பிற பகுதிகளுக்கான பாதாள சாக்கடைத் திட்டங்களுக்கான திட்ட மதிப்பீடு ரூ.1,006.15 கோடிக்கு தயாரிக்கப்பட்டு, அம்ரூத் 2.0 நிதி ஆதாரத்துடன் அரசின் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டங்களின் விவரங்கள் அட்டவணை 6.11–ல் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 6.11

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) | பயன் பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட சின்னவேடம்பட்டி, வெள்ளக்கிணறு மற்றும் சரவணம்பட்டி (பகுதி) பகுதிகளுக்கான பாதாள சாக்கடைத் திட்டம். (மண்டலம் – VI) (9.95 MLD) | 279.05 | 0.64 |
| 2 | ஓசூர் மாநகராட்சிக்கான பாதாள சாக்கடைத் திட்டம். (32.65 MLD) | 574.96 | 2.25 |
| 3 | தூத்துக்குடி மாநகராட்சியின் விடுபட்ட மற்றும் விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் பகுதி சார்ந்த வளர்ச்சி அல்லாத (Non Area Based Development) பிற பகுதிகளுக்கான பாதாள சாக்கடைத் திட்டம் (5.37 MLD) | 152.14 | 0.43 |
| | மொத்தம் (47.97 MLD) | 1,006.15 | 3.32 |

### 6.5.3 2022-2023 ஆம் ஆண்டில் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்ட பாதாள சாக்கடைத் திட்டங்கள்

மன்னார்குடி, அருப்புக்கோட்டை நகராட்சிகளுக்கான 2 பாதாள சாக்கடைத் திட்டங்களுக்கான திட்ட



அறிக்கை, 1.76 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில், ரூ.642.92 கோடிக்கு தயாரிக்கப்பட்டு, நிதி ஆதாரம் மற்றும் அரசின் நிர்வாக ஒப்புதல் பெற நடவடிக்கையில் உள்ளது.

## 6.6 சிறப்பு திட்டங்கள்

### ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டம் –இரண்டாவது கட்டம்.

தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட மக்களுக்கு வழங்கப்படும் குடிநீரின் அளவினை உயர்த்தி வழங்கும் வகையில் ஒகேனக்கல் கூட்டு குடிநீர் திட்டத்தின் இரண்டாவது கட்டப்பணிகளை செயல்படுத்த விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 20.01.2022-ல் அறிவிக்கப்பட்டது.

அதன்படி, தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் உள்ள மாநகராட்சி மற்றும் நகராட்சிகளுக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 135 லிட்டர் வீதமும், பேரூராட்சிகளுக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 90 லிட்டர் வீதமும் மற்றும் ஊரகப் பகுதிகளுக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் வீதமும் 304.83 MLD குடிநீர் வழங்கும் பொருட்டு, காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்ட ஒகேனக்கல் கூட்டு குடிநீர் திட்டத்திற்கான

(இரண்டாவது கட்டம்) விரிவான திட்ட அறிக்கை ரூ.7,145 கோடிக்கு தயாரிக்கப்பட்டு, வெளிப்புற நிதி உதவி திட்டங்களின் (EAP) கீழ் நிதியுதவி பெற அரசின் பரிசீலனையில் உள்ளது.

இத்திட்டத்தின் மூலம் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களை சேர்ந்த ஓசூர் மாநகராட்சி, தருமபுரி நகராட்சி, 16 பேரூராட்சிகள் மற்றும் 20 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 6,802 ஊரக குடியிருப்புகளைச் சார்ந்த 38.82 இலட்சம் மக்கள் பயன் பெறுவர்.

**6.7 கூட்டுக்குடிநீர் திட்டங்களின் இயக்கம் மற்றும் பராமரிப்பு**

அரசாணை (நிலை) எண் 84, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 10.03.1994–ன்படி, ஒன்றுக்கும் மேற்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்பட்டுள்ள கூட்டுக் குடிநீர் திட்டங்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

தற்போது, 12 மாநகராட்சிகள், 65 நகராட்சிகள், 346 பேரூராட்சிகள், 52,361 ஊரக குடியிருப்புகள் மற்றும் 568 தொழிற்சாலைகள்/ நிறுவனங்கள் பயன்பெறும் வகையில் 4.53 கோடி மக்களை




பயனாளிகளாக கொண்ட 544 கூட்டுக் குடிநீர் திட்டங்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

மேற்கண்ட 544 கூட்டுக் குடிநீர் திட்டங்களின் மூலம் சராசரியாக நாளொன்றுக்கு 2,104 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

அதன் விவரங்கள் அட்டவணை 6.12–ல் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 6.12

| வ. எண் | பயனாளிகளின் பெயர் | பயனாளிகளின் எண்ணிக்கை | திட்ட வடிவமைப்பின் படி வழங்கப்பட வேண்டிய குடிநீரின் அளவு (எம்.எல்.டி.) | தற்போது சராசரியாக வழங்கப்படும் குடிநீரின் அளவு (எம்.எல்.டி.) |
|---|---|---|---|---|
| 1 | மாநகராட்சிகள் | 12 | 292 | 259 |
| 2 | நகராட்சிகள் | 65 | 295 | 259 |
| 3 | பேரூராட்சிகள் | 346 | 379 | 331 |
| 4 | ஊரகக்குடியிருப்புகள் | 52,361 | 1366 | 1197 |
| 5 | தொழிற்சாலைகள்/ நிறுவனங்கள் | 568 | 67 | 58 |
| | மொத்தம் | 53,352 | 2,399 | 2,104 |






ஜல்ஜீவன் திட்டத்தின் கீழ் வீட்டிணைப்புகளின் மூலம் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் வழங்கிட திருச்சி, அரியலூர், பெரம்பலூர், கோயம்புத்தூர், திருப்பூர், நாமக்கல், சேலம், நீலகிரி, செங்கல்பட்டு, திருவள்ளூர், கடலூர், கள்ளக்குறிச்சி, ராமநாதபுரம், சிவகங்கை, திண்டுக்கல் மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பராமரிப்பில் உள்ள 56 கூட்டுக் குடிநீர் திட்டங்களில் ரூ. 1,658.31 கோடி மதிப்பீட்டில் புனரமைப்பு பணிகளை செயல்படுத்த அரசு ஒப்புதல் வழங்கப்பட்டு பல்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன.

## 6.8 ஆராய்ச்சி, வடிவமைப்பு, பயிற்சி மற்றும் திட்ட மேலாண்மை மையம்

### 6.8.1 ஆராய்ச்சி மற்றும் வடிவமைப்பு பிரிவு

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய பராமரிப்பில் உள்ள கூட்டுக் குடிநீர் திட்டங்களை சிறப்பாக பராமரிக்கும் பொருட்டு கீழ்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

- தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பராமரிப்பில் உள்ள கூட்டுக் குடிநீர் திட்டங்களில் குறைந்த திறன் (less efficiency) கொண்ட 57 மின்னிறைப்பான்கள் (Pumpsets)

ரூ.5.95 கோடி செலவில் பழுது / மாற்றம் செய்யப்பட்டு, மின் கட்டணத்தில் ஆண்டு ஒன்றிற்கு ரூ.2.04 கோடி சேமிப்பு செய்யப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பின்வரும் கூட்டுக்குடிநீர் திட்டங்களில் வழங்கப்படும் குடிநீரின் அளவை இணையவழி செயல்திறன் மூலம் (Internet of Things (IoT)) கண்காணிக்க நீர் அளவு கருவிகள் பொருத்தப்பட்டு வருகின்றன.

1. ஈரோடு மாவட்டத்தின் கோபி, நம்பியூர் ஆகிய ஒன்றியங்களில் 6 கிராம பஞ்சாயத்தில் உள்ள 96 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம்.
2. திருநெல்வேலி மாவட்டத்தின் பாப்பாக்குடி ஒன்றியத்தில் உள்ள 17 குடியிருப்புகள், 1 பேரூராட்சி பகுதி மற்றும் தென்காசி மாவட்டத்தின் ஆலங்குளம் ஒன்றியத்தில் உள்ள 31 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம்.
3. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பராமரிப்பில் உள்ள, திருவண்ணாமலை மாவட்டத்தின் தண்டராம்பட்டு ஒன்றியத்தின் கொழுந்தம்பட்டு கிராம ஊராட்சியில் உள்ள சாத்தனூர் மற்றும் 45 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம்.



### 6.8.2 பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் உள்ள தொழில்நுட்ப மற்றும் இதர பிரிவு அலுவலர்களுக்கும் மற்றும் உள்ளாட்சி அமைப்பு அலுவலர்களுக்கும் பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டு வகுப்புகளை சென்னையிலுள்ள தலைமை பயிற்சி மையம் மற்றும் கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய இடங்களில் உள்ள துணை பயிற்சி மையங்கள் வழங்குகின்றன.

- 2022-23 ஆம் ஆண்டில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திலுள்ள களப்பொறியாளர்கள், நிலநீர் புவியியலாளர்கள், வரைவு அலுவலர்கள், கணக்கு மற்றும் நிர்வாக அலுவலர்கள் உட்பட 1,100 நபர்களுக்கு ரூ. 1.30 கோடி மதிப்பீட்டில் ஜல் ஜீவன் இயக்கத்தின் நிதியுதவியுடன் 11 பயிற்சி திட்டங்கள் நடத்தப்பட்டன.
- 2023-24 ஆம் நிதியாண்டில், கீழ்க்கண்ட தலைப்புகளில் பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன.
  - ➢ கூட்டுக் குடிநீர் திட்டங்கள் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டங்களின் செயலாக்கத்தில் புதுமையான தொழில்நுட்பங்களை பயன்படுத்துதல்.

- பாதாள சாக்கடைத் திட்டங்களை பாதுகாப்பு அம்சங்களுடன் செயல்படுத்துதல், இயக்குதல் மற்றும் பராமரித்தல்
- குடிநீர் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டங்களின் விரிவான திட்ட அறிக்கையை மதிப்பீடு செய்தல் மற்றும் தயாரித்தல்.
- பராமரிப்பில் உள்ள குடிநீர் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டங்களில் மின் பயன்பாட்டினை தணிக்கை செய்தல் மற்றும் குடிநீர் விநியோகத்தை தணிக்கை செய்தல், குடிநீர் தரம் கண்காணித்தல், நவீன குடிநீர் அளவுமானிகள் உட்பட குடிநீர் அளவுமானிகளின் பயன்பாடு.
- குடிநீர் குழாய்களில் ஏற்படும் உயர் மற்றும் தாழ்வு அழுத்தத்தினால் ஏற்படும் பாதிப்பு (Water Hammer) குறித்து வடிவமைத்தல் மற்றும் கட்டிட வடிவமைப்பு.
- பெரிய கூட்டுக் குடிநீர் திட்டங்களை பார்வையிட்டு அதன் இயக்கங்களை அறிதல்.



- குடிநீர் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டங்களின் கட்டமைப்பினை மென் பொருள் (Water GEMS & Sewer GEMS) மூலம் பகுத்தாய்வு மற்றும் வடிவமைத்தல்.
- தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் ஜல்ஜீவன் இயக்கத்தின் வழிகாட்டுதல்களின்படி கட்டுமான பொருள்களை ஆய்வகத்தில் சோதனை செய்தல் மற்றும் தர அம்சங்களை களத்தில் உறுதி செய்தல்.
- சமீபத்திய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி புவியியல் தகவல் அமைப்புடன் கள ஆய்வு செய்தல்.
- நீதிமன்ற வழக்குகள், ஒழுங்கு நடவடிக்கைகளை கையாளுதல் மற்றும் தகவல் அறியும் உரிமை சட்டம்.
- கணக்கு மற்றும் தணிக்கை
- ஒப்பந்தப்புள்ளி நடைமுறை மற்றும் ஒப்பந்த மேலாண்மை

6.9 கட்டுமான பொருட்கள் சோதனை மற்றும் தரக் கட்டுப்பாட்டு ஆய்வகங்கள்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் நான்கு தரக்கட்டுப்பாட்டு சோதனை ஆய்வகங்கள் திருச்சி, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திண்டிவனம் ஆகிய இடங்களில் செயல்படுகின்றன. இவற்றில் கோயம்புத்தூர் மற்றும் மதுரையில் உள்ள சோதனை ஆய்வகங்கள் NABL தர சான்று பெற்றவை.

இந்த சோதனை ஆய்வகங்களில், கீழ்க்கண்ட கட்டுமானப் பொருட்கள் பரிசோதனை செய்யப்படுகின்றன.

- சிமெண்ட், கம்பி, ஆற்று மணல், தூளாக்கப்பட்ட கல் மணல் (M Sand), ஜல்லி, செங்கல், கனசதுர வடிவ கான்கிரீட் மாதிரிகள் (Concrete Cubes), கான்கிரீட் கலவை வடிவமைப்பு (Mix Design)
- வடிகட்டி மணல்,
- PVC குழாய், UPVC குழாய், O-PVC குழாய், HDPE குழாய், DWC குழாய், GI குழாய், சுடுமண் (Stoneware) குழாய், நெகிழ் இரும்பு குழாய் (DI)
- மின் கடத்திகள் (Electric Cables)



2022-23 ஆம் நிதியாண்டில் (ஏப்ரல் 2022 முதல் பிப்ரவரி 2023 வரை) 9,293 மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டுள்ளன.

2023-24 ஆம் நிதியாண்டில், தோராயமாக 10,000 மாதிரிகள் பரிசோதிக்க திட்டமிடப்பட்டு உள்ளது.

6.10 குடிநீரின் தரப்பரிசோதனை மற்றும் கண்காணிப்பு

பொதுமக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதலை உறுதிசெய்யும் பொருட்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னையில் மாநில அளவிலான ஒரு குடிநீர் பரிசோதனைக் கூடம், 31 மாவட்ட குடிநீர் பரிசோதனைக் கூடங்கள், 56 துணை மாவட்ட குடிநீர் பரிசோதனைக் கூடங்கள் மற்றும் 25 ஒன்றிய அளவிலான குடிநீர் பரிசோதனைக் கூடங்களை அமைத்துள்ளது. வழங்கப்படும் குடிநீரில் இரசாயனம் மற்றும் நுண்கிருமிகள் குறித்த பரிசோதனைகள் இவற்றில் மேற்கொள்ளப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் கீழ் சென்னையில் உள்ள மாநில அளவிலான குடிநீர் தரப்பரிசோதனைக் கூடம் NABL தரச்சான்றிதழ் பெற்று, மாநில அளவிலான வழிகாட்டி பரிசோதனைக் கூடமாக இந்திய அரசினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேலும் ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ் 31 மாவட்ட (புதிதாக

உருவாக்கப்பட்ட மாவட்டங்கள் தவிர) அளவிலான குடிநீர் பரிசோதனைக் கூடங்களுக்கு NABL தரச்சான்றிதழ் மற்றும் 2 துணை மாவட்ட அளவிலான குடிநீர் பரிசோதனைக் கூடத்திற்கு NABL அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. மேலும் 54 துணை மாவட்ட மற்றும் 25 ஒன்றிய அளவிலான குடிநீர் பரிசோதனைக் கூடங்களுக்கு NABL அங்கீகாரம் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2022-23 ஆம் நிதி ஆண்டில் ஜல் ஜீவன் திட்ட நிதி மற்றும் மாநில நிதி உதவியுடன் கிட்டத்தட்ட 6.63 இலட்சம் குடிநீர் மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டன.

**6.11 நிலநீர் புவியியல் (Hydro geology) பிரிவின் செயல்பாடுகள்**

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் செயல்படுத்தப்படும் குடிநீர் திட்டங்களுக்கு தேவையான குடிநீர் ஆதாரங்கள் செயற்கைகோள் தொலை உணர்வு தொழில்நுட்பம் (Remote Sensing) மற்றும் புவியியல் தகவல் அமைப்பு (Geographical Information System) மூலமாக கண்டறியப்படுகின்றன. மேலும் இவை, நீராதாரத்தின் நீடித்த நிலைத்தன்மையை உறுதி செய்ய நீர் செறிவூட்டு கட்டமைப்புகள் ஏற்படுத்துவதற்கு சாத்தியமான இடங்களை தேர்வு செய்யவும், பயன்படுத்தப்படுகின்றன.



தமிழ்நாட்டில் பரவலாக பருவ மழைக்கு முந்தைய மற்றும் பிந்தைய நீரின் தரம் குறித்த விவரங்கள் அடங்கிய பகுதிவாரியான வரைபடங்கள் (Topo Sheets – 220) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட்டுள்ளது.

குடிநீர் ஆதாரங்கள், மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள், பள்ளிகள் மற்றும் அங்கன்வாடி குடிநீர் கட்டமைப்புகள் ஆகியன புவியிடக்குறிப்பு (Geo Tagging) செய்யப்பட்டு வருகின்றன. 35,184 குடிநீர் கட்டமைப்புகள் இணையதளத்தில் புவியிடக்குறிப்பு செய்யப்பட்டுள்ளன.

2022-23 ஆம் ஆண்டில், 714 புவி இயற்பியல் ஆய்வுப்பணிகள் (Geo-physical Survey) மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**6.11.1 மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள்**

தமிழ் நாட்டில் உள்ள நகர பகுதிகளில், வெவ்வேறு வகையான மழைநீர் சேகரிப்பு அமைப்பு முறைகளை பயன்படுத்தி நீடித்த, நிலையான நீர் பாதுகாப்பினை உறுதி செய்யும் நோக்குடன் செயல்படும், நீடித்த நிலையான குடிநீர் பாதுகாப்பு இயக்கத்தின் (Sustainable Water Security Mission – SuWaSeM), ஒருங்கிணைப்பு முகமையாக தமிழ்நாடு

குடிநீர் வடிகால் வாரியம் செயல்பட்டு தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கி வருகிறது.

நகராட்சி நிருவாக இயக்குநரகம் மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநரகம் ஆகிய துறைகள் மூலம் 50:50 நிதி பங்கீட்டுடன் (நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு மற்றும் SuWaSeM) நீடித்த நிலையான குடிநீர் பாதுகாப்பு இயக்கம் (Sustainable Water Security Mission – SuWaSeM) செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- நீர்நிலைகளை புனரமைத்தல் மற்றும் புதுப்பித்தல்.
- மேற்கூரையில் விழும் மழைநீரை சேகரித்தல்.
- மேற்கூரை நீங்கலாக, வளாகத்தில் விழும் மழைநீரை சேகரித்தல்.
- மழைநீர் வடிகாலில் வரும் நீரை சேகரித்தல்.

மேற்கண்ட குடிநீர் இயக்கத்தில் இதுவரை ரூ.8.13 கோடி செலவிடப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் பருவ மழைக்கு முன்னும் மற்றும் பின்னும் மாவட்டங்களில் நிலவும் சராசரி நிலத்தடி நீர்மட்ட விவரங்கள் 1286 கண்காணிப்பு கிணறுகள் மூலம் அளவிடப்படுகின்றன.



மே–2022 மற்றும் ஜனவரி–2023 காலகட்டத்தின் மாவட்ட வாரியாக சராசரி நிலத்தடி நீர் மட்ட (Below Ground Level) விவரங்கள் அட்டவணை 6.13 ல் கொடுக்கப்பட்டுள்ளன (பருவமழைக்கு முன் மற்றும் பருவமழைக்குப் பின்).

**அட்டவணை 6.13**

**நீர் மட்டம் –மீட்டர்**

| மாவட்டம் | மொத்த கிணறுகளின் (ஆழ்துளை/திறந்த வெளி) எண்ணிக்கை | மே–22 | ஜனவரி–23 | நீர் மட்டம் உயர்வு (+) / குறைவு (–) |
|---|---|---|---|---|
| அரியலூர் | 27 | 23.3 | 19.50 | +3.80 |
| செங்கல்பட்டு | 29 | 4.7 | 3.82 | +0.88 |
| கோயம்புத்தூர் | 38 | 11.6 | 8.90 | +2.70 |
| கடலூர் | 42 | 34.0 | 16.10 | +17.90 |
| தர்மபுரி | 37 | 7.3 | 4.30 | +3.0 |
| திண்டுக்கல் | 51 | 11.4 | 11.35 | +0.05 |
| ஈரோடு | 42 | 10.6 | 3.38 | +7.22 |
| கள்ளக்குறிச்சி | 42 | 6.3 | 3.60 | +2.70 |
| காஞ்சிபுரம் | 17 | 5.7 | 4.87 | +0.83 |
| கன்னியாகுமாரி | 16 | 5.0 | 5.30 | –0.30 |
| கரூர் | 34 | 13 | 3.74 | +9.26 |
| கிருஷ்ணகிரி | 44 | 7.0 | 2.50 | +4.50 |
| மதுரை | 31 | 4.3 | 1.25 | +3.05 |
| மயிலாடுதுறை | 13 | 7.8 | 4.91 | +2.89 |
| நாகப்பட்டினம் | 13 | 2.2 | 1.38 | +0.82 |

| மாவட்டம் | மொத்த கிணறுகளின் (ஆழ்துளை/திறந்த வெளி) எண்ணிக்கை | மே-22 | ஜனவரி-23 | நீர் மட்டம் உயர்வு (+) / குறைவு (-) |
|---|---|---|---|---|
| நாமக்கல் | 37 | 7.0 | 3.83 | +3.17 |
| பெரம்பலூர் | 16 | 5.6 | 2.66 | +2.94 |
| புதுக்கோட்டை | 24 | 13.3 | 9.00 | +4.30 |
| ராமநாதபுரம் | 91 | 16.5 | 15.67 | +0.83 |
| ராணிப்பேட்டை | 20 | 4.4 | 3.11 | +1.29 |
| சேலம் | 41 | 5.9 | 3.70 | +2.20 |
| சிவகங்கை | 79 | 9.2 | 7.57 | +1.63 |
| தென்காசி | 27 | 5.0 | 4.90 | +0.10 |
| தஞ்சாவூர் | 35 | 18.5 | 8.77 | +9.73 |
| தேனி | 20 | 12.4 | 9.46 | +2.94 |
| திருநெல்வேலி | 49 | 3.9 | 4.90 | -1.0 |
| திருப்பத்தூர் | 17 | 6 | 2.59 | +3.41 |
| திருப்பூர் | 45 | 17.6 | 4.36 | +13.24 |
| திருவள்ளூர் | 36 | 3.9 | 3.76 | +0.14 |
| திருவண்ணாமலை | 39 | 6.5 | 2.59 | +3.91 |
| திருவாரூர் | 58 | 4.4 | 4.12 | +0.28 |
| தூத்துக்குடி | 19 | 10.5 | 4.50 | +6.0 |
| திருச்சிராப்பள்ளி | 35 | 17.63 | 14.22 | +3.41 |
| வேலூர் | 15 | 5.1 | 3.11 | +1.99 |
| விழுப்புரம் | 47 | 8.7 | 5.71 | +2.99 |
| விருதுநகர் | 60 | 4.7 | 3.47 | +1.23 |
| மாநில சராசரி | 1286 | 9.3 | 5.74 | +3.56 |



## 6.12 நிதி நிலை

2022-23 ஆம் ஆண்டுக்கான கணக்குகளின்படி மொத்த வருவாய் செலவு 28.02.2023 வரை ரூ.1,231.47 கோடியாகும். அதே சமயம், மொத்த வருமானம் ரூ.1,118.79 கோடி.

2020-21 முதல் 2022-23 வரையிலான (பிப்ரவரி 2023 வரை) வருமானம், செலவு, பற்றாக்குறை/உபரி மற்றும் ஒட்டுமொத்த பற்றாக்குறை விவரங்கள் அட்டவணை 6.14-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 6.14

(ரூ.கோடியில்)

| வ. எண் | விவரங்கள் | 2020-21 | 2021-22 | 2022-23 பிப்ரவரி 23 வரை (தற்காலிகமானது) |
|---|---|---|---|---|
| I | வருவாய் வருமானம் | | | |
| 1. | வீத கட்டணம் | 197.60 | 314.54 | 245.25 |
| 2. | குடிநீர் கட்டணம் | 675.92 | 729.75 | 642.95 |
| 3. | இதர வருமானம் | 109.83 | 128.79 | 155.01 |
| 4. | மானியங்கள் | 159.48 | 217.13 | 75.58 |
| | மொத்தம் | 1,142.83 | 1,390.21 | 1118.79 |
| II | வருவாய் செலவு | | | |
| 1. | சம்பளம் | 109.38 | 110.40 | 92.82 |
| 2. | ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதிய நன்மைகள் | 375.14 | 371.42 | 315.90 |

| வ. எண் | விரங்கள் | 2020-21 | 2021-22 | 2022-23 பிப்ரவரி 23 வரை (தற்காலிகமானது) |
|---|---|---|---|---|
| 3. | கூட்டுக் குடிநீர் திட்டம் | 962.54 | 1034.89 | 799.80 |
| 4. | இதர செலவுகள் | 28.92 | 30.04 | 22.95 |
| | மொத்தம் | 1,475.98 | 1,546.75 | 1231.47 |
| | | | | |
| | பற்றாக்குறை | 333.15 | 156.54 | 112.68 |
| | ஒட்டு மொத்த பற்றாக்குறை | 2,643.78 | 2,800.32 | 2,913 .00 |

28.02.2023 அன்று செலுத்த வேண்டிய தொகை, பெறத்தக்க மற்றும் நிலுவையில் உள்ள விவரங்கள் அட்டவணை 6.15ல் கொடுக்கப்பட்டுள்ளன.

### அட்டவணை 6.15

(ரூ.கோடியில்)

| வ. எண் | விவரங்கள் | 28.02.2023 அன்று தொகை (தற்காலிகமானது) |
|---|---|---|
| I | செலுத்த வேண்டிய தொகை | |
| 1. | தமிழ்நாடு மின் பகிர்மான கழகம் (TANGEDCO) – மின்பயன்பாடு கட்டணம் | 2,207.99 |
| 2. | வாரிய பணியாளர்களுக்கு ஓய்வூதிய பலன்கள் | 13.69 |
| 3. | கூட்டுக் குடிநீர் திட்டம்– இயக்குதல் மற்றும் | 483.30 |



| வ. எண் | விவரங்கள் | 28.02.2023 அன்று தொகை (தற்காலிகமானது) |
|---|---|---|
| | பராமரிப்பு ஒப்பந்தக்காரர்கள் | |
| 4. | வேலை நிதி ஊழியர் (WCE)–நீதிமன்ற வழக்கு – நிலுவைத் தொகை | 13.70 |
| | மொத்தம் | 2,718.68 |
| II | பெறப்பட வேண்டிய குடிநீர் கட்டணம் | |
| 1. | மாநகராட்சிகள் | 307.68 |
| 2. | நகராட்சிகள் | 45.47 |
| 3. | பேரூராட்சிகள் | 12.49 |
| 4. | கிராம ஊராட்சிகள் | 320.90 |
| 5. | தனியார் பயனாளிகள் | 143.75 |
| | மொத்தம் | 830.29 |
| III | ஆயுள் காப்பீட்டு கழகத்திற்கு செலுத்த வேண்டிய கடன் நிலுவைத் தொகை: | |
| | a) அசல் | 68.30 |
| | b) வட்டி | 23.60 |
| | மொத்தம் | 91.90 |

## 6.13 உயிர் நீர் இயக்கம் (Jal Jeevan Mission)

தமிழ் நாட்டின் ஊரக பகுதிகளிலுள்ள அனைத்து வீடுகளுக்கும் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர், வீட்டுக் குழாய் இணைப்பு மூலம் 2024-க்குள் வழங்குவது உயிர் நீர் இயக்கத்தின் நோக்கமாகும்.

### 6.13.1 உயிர் நீர் இயக்கத்தின் கூறுகள்

i. நீடித்த நிலைத் தன்மை உடைய நீராதாரங்களை (source sustainability) தெரிந்தெடுத்தல் மற்றும் ஏற்கனவே உள்ள நீராதாரங்களின் நீடித்த நிலைத் தன்மையை உறுதி செய்தல் (source strengthening).

ii. தேவைப்படும் இடங்களில், அதிக அளவு நீரினை குழாய்கள் மூலம் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு கொண்டு செல்லுதல் (bulk water transfer), நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் பகிர்மான குழாய்களின் அமைப்பினை ஏற்படுத்துதல்.

iii. அனைத்து ஊரக வீடுகளுக்கும் குழாய் இணைப்பு வழங்க தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை (in-village infrastructure) உருவாக்குதல்.



iv. பராமரிப்பிலுள்ள குடிநீர் திட்டங்கள் மற்றும் நடைபெற்று வரும் குடிநீர் திட்டங்களை மறுசீரமைப்பு (retrofitting) செய்து ஊரக பகுதிகளில் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் அளவு குடிநீர் வழங்குதல்.

v. தகவல், கல்வி மற்றும் தொடர்பு (IEC), மனிதவள மேம்பாடு (HRD), பயிற்சி, நீர் தர பரிசோதனை மற்றும் கண்காணிப்பு ஆகியவை மேற்கொள்ளல்.

### 6.13.2 செயல்படுத்தும் துறை மற்றும் மாநில பொறுப்பு அலுவலர்

தமிழ்நாட்டில் உயிர் நீர் இயக்கத்தினை நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் மூலம் செயல்படுத்தவும், இத்துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளரை மாநில பொறுப்பு அலுவலராகவும் (State Nodal Officer) நியமித்து, அரசாணை (பல்வகை) எண் 26, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (கு.வ.1) துறை, நாள் 04.02.2022 இன் மூலம் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில், உயிர் நீர் இயக்கத்திற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் அவர்கள், திட்ட இயக்குநராக உள்ளார்.

உயிர் நீர் இயக்க செயல்பாட்டில், இதன் திட்ட இயக்குநருக்கு உதவிட மாநில திட்ட மேலாண்மை பிரிவு செயல்பட்டு வருகிறது.

6.13.3 குழுக்கள்

அரசாணை (பல்வகை) எண்.33, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (கு.வ.1) துறை நாள் 15.02.2022-இன்படி பின்வரும் குழுக்கள் மறுநியமனம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

i. உயர் நிலைக் குழு (Apex Committee)

அரசு தலைமைச் செயலாளர் அவர்களை இக்குழுவின் தலைவராகவும், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசு கூடுதல் தலைமை செயலாளர் அவர்களை உறுப்பினர் – செயலராகவும், மற்றும் 7 துறைகளின் அரசு கூடுதல் தலைமை செயலாளர் / முதன்மை செயலாளர் / செயலாளர், உயிர் நீர் இயக்க மாநில திட்ட இயக்குநர், ஒன்றிய அரசின் பிரதிநிதி, பிற 3 உறுப்பினர்களும் இருப்பார்கள். இக்குழு கொள்கை முடிவுகள், மாநில செயல் திட்டத்தை இறுதி செய்தல் ஆகிய பணிகளை மேற்கொள்கிறது.



ii. மாநில அளவிலான திட்ட ஒப்புதல் குழு (State Level Scheme Sanctioning Committee)

உயர்நிலைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களுக்கு மாநில அளவிலான திட்ட ஒப்புதல் வழங்கும் குழு தேவையான தொழில்நுட்ப அனுமதியை வழங்கும். இக்குழுவில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் தலைவராகவும் மற்றும் ஒன்றிய அரசின் பிரதிநிதி உட்பட 13 உறுப்பினர்களும் உள்ளனர்.

iii. செயற்குழு (Executive Committee)

உயிர் நீர் இயக்கத்தின் திட்ட இயக்குநர் தலைவராகவும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் ஆணையர், நிதித்துறை கூடுதல் செயலாளர் மற்றும் 4 மாநில அரசு அதிகாரிகளை உறுப்பினர்களாக கொண்ட செயற்குழுவால் திட்ட செயலாக்கம் கண்காணிக்கப்படும்.

6.13.4 செயலாக்க வழிமுறைகள்

உயிர் நீர் இயக்கத்தின் குறிக்கோளை நிறைவேற்ற பின்வரும் வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன.

i. ஊரக பகுதிகளிலுள்ள ஒவ்வொரு குக்கிராமங்களிலும் குடிநீர் தேவைகளின்

அடிப்படையில் கிராம செயல் திட்டம் (Village action plan) தயாரிக்கப்படுகிறது. குக்கிராமங்களின் செயல் திட்டங்கள் ஒன்றாக இணைக்கப்பட்டு, கிராம செயல் திட்டம் உருவாக்கப்பட்டு கிராம சபையின் ஒப்புதல் பெறப்படுகிறது.

ii. மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளின் செயல் திட்டங்களும் ஒன்றிணைக்கப்பட்டு மாவட்ட செயல் திட்டம் (District action plan) தயாரிக்கப்படுகிறது. இத்திட்டத்திற்கு மாவட்ட ஆட்சியர் தலைமையிலான மாவட்ட குடிநீர் மற்றும் சுகாதார முகமை (District Water and Sanitation Mission) ஒப்புதல் வழங்குகிறது.

iii. மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்டங்களின் செயல் திட்டங்கள், கூட்டுக் குடிநீர் திட்டங்கள், மொத்த நீர் பரிமாற்றம் ஆகியவை தொகுக்கப்பட்டு மாநில செயல் திட்டம் (State action plan) தயாரிக்கப்படுகிறது. மேலும் ஒவ்வொரு ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் மாநில அளவில், ஆண்டு செயல் திட்டம் (Annual action plan) தயாரிக்கப்படுகிறது.



### 6.13.5 நிதியுதவி

உயிர் நீர் இயக்கத்தின் கீழ் ஊரக வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்குவதற்கான பணிகளை செயல்படுத்த 50 சதவிகித நிதியினை இந்தியஅரசும் 50 சதவிகித நிதியினை மாநில அரசும் வழங்குகிறது. துணை நடவடிக்கைகள் (support activities) மற்றும் நீர் தர கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கு இந்திய அரசு 60 சதவிகிதமும் மாநில அரசு 40 சதவிகிதமும் வழங்குகிறது.

சமூக பங்களிப்பு (Community Contribution)

மக்களின் ஈடுபாட்டை ஊக்குவிக்க, கிராம ஊராட்சியில் உட்கட்டமைப்பு செலவினத்தில் மலை மற்றும் வனப்பகுதி, ஆதி திராவிடர், பழங்குடியினர் குடியிருப்புகளில் 5 சதவிகிதமும், இதர கிராம ஊராட்சிகளில் 10 சதவிகிதமும் பணம் / பொருள் / உடல் உழைப்பு ஆகியவை பொது மக்கள் பங்களிப்பாக பெறப்படும்.

### 6.13.6 செயல்படுத்துதல்

உயிர் நீர் இயக்கம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையால் இணைந்து செயல்படுத்தப்படுகிறது.

6.13.6.1 தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

i. ஒன்றுக்கும் மேற்பட்ட கிராம ஊராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டங்கள் (Combined water supply schemes / multi village schemes), தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் வடிவமைத்து செயல்படுத்தப்படுகிறது.

ii. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வரும் கூட்டுக் குடிநீர் திட்டங்களின் நீர் ஆதாரத்தை பெருக்குதல், மின்சாதனங்களின் திறன்களை கூட்டுதல் மற்றும் குழாய்களை மறுசீரமைப்பு செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, கூடுதல் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

6.13.6.2 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை

i. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை, ஒற்றை கிராம திட்டங்களை (Single Village Schemes) வடிவமைத்து செயல்படுத்துகிறது. இத்திட்டங்களில், நீர் ஆதாரத்தை உருவாக்குதல், கிராம உட்கட்டமைப்புகளை ஏற்படுத்துதல், மேல் நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டுதல் மற்றும் வீட்டு குழாய் இணைப்புகள் வழங்குதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.



ii. மேலும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் செயல்படுத்தப்படும் பலகிராம திட்டங்களில், கிராம உட்கட்டமைப்புகளை வடிவமைத்தல், செயல்படுத்துதல் ஆகிய பணிகளுடன் வீட்டு குழாய் இணைப்புகள் வழங்கும் பணிகளையும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை மேற்கொள்கிறது.

6.13.7 உயிர் நீர் இயக்கத்தின் இதர முக்கிய அம்சங்கள்

i. அனைத்து உயிர் நீர் இயக்கப் பணிகளின் தரத்தினை உறுதி செய்ய மூன்றாம் தரப்பு மூலம் ஆய்வு மேற்கொள்ளுதல்.

ii. குடிநீரின் அளவு, தரம், மற்றும் சீரான விநியோகம் ஆகியவற்றுக்கான செயல்பாட்டு மதிப்பீடு மேற்கொள்ளுதல்.

iii. ஒருங்கிணைந்த தகவல் மேலாண்மை அமைப்பின் (Integrated Management Information System – IMIS) மூலம் கண்காணித்தல்.

iv. கள ஆய்வு உபகரணங்களின் (Field Test Kit – FTK) மூலம் நீரின் தரத்தினை ஆய்வு செய்தல்.

v. நீரினை சிக்கனமாக பயன்படுத்துதல், மழைநீர் சேகரிப்பு, நீர் பாதுகாப்பு மற்றும் இதர நீர் விநியோகம் தொடர்பான தகவல் கல்வி மற்றும் தொடர்பு (IEC Activities) செயல்பாடுகளை மேற்கொள்ளுதல்.

### 6.13.8 இதர திட்ட நிதிகளை ஒருங்கிணைத்தல் (Convergence of Funds)

ஆண்டு செயல் திட்டத்தில் அனுமதிக்கப்பட்ட, உயிர் நீர் இயக்க திட்ட பணிகளை செயல்படுத்த, 15-வது நிதிக் குழு மானியம், மாநில நிதிக் குழு மானியம் (SFC) மற்றும் இதர மானிய நிதிகள் ஒருங்கிணைக்கப்படுகிறது.

### 6.13.9 உயிர் நீர் இயக்கத்தின் தற்போதைய நிலை

தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளில் உள்ள 125.52 இலட்சம் வீடுகளில், இதுவரை (01.03.2023) 77.14 இலட்சம் (61.46%) வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இதில் 2022-23 ம் ஆண்டில் 24.15 இலட்சம் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

மாவட்டம் வாரியாக வீட்டுக் குழாய் இணைப்புகளின் விவரங்கள் அட்டவணை 6.16-ல் கொடுக்கப்பட்டுள்ளன.



### அட்டவணை 6.16

| வ.எண் | மாவட்டம் | மொத்த வீடுகள் | வீட்டுக் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டவை | சதவீதம் % | வீட்டுக் குழாய் இணைப்புகள் வழங்கப்பட வேண்டியவை | மொத்த கிராம ஊராட்சிகள் | 100 % வீட்டிணைப்பு உள்ள கிராம ஊராட்சிகள் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | அரியலூர் | 2,07,503 | 1,31,418 | 63 | 76,085 | 201 | 64 |
| 2 | செங்கல்பட்டு | 4,16,489 | 3,21,449 | 77 | 95,040 | 359 | 159 |
| 3 | கோயம்புத்தூர் | 3,74,014 | 3,08,095 | 82 | 65,919 | 228 | 60 |
| 4 | கடலூர் | 5,03,839 | 2,72,770 | 54 | 2,31,069 | 683 | 127 |
| 5 | தருமபுரி | 3,43,213 | 74,543 | 22 | 2,68,670 | 251 | 1 |
| 6 | திண்டுக்கல் | 4,57,368 | 2,54,801 | 56 | 2,02,567 | 306 | 13 |
| 7 | ஈரோடு | 4,20,703 | 2,87,297 | 68 | 1,33,406 | 225 | 59 |
| 8 | கள்ளக்குறிச்சி | 3,03,892 | 1,40,919 | 46 | 1,62,973 | 412 | 32 |
| 9 | காஞ்சிபுரம் | 2,15,901 | 2,15,901 | 100 | 0 | 274 | 274 |
| 10 | கன்னியாகுமரி | 2,16,738 | 1,97,647 | 91 | 19,091 | 95 | 19 |
| 11 | கரூர் | 2,04,464 | 1,40,055 | 68 | 64,409 | 157 | 33 |
| 12 | கிருஷ்ணகிரி | 4,09,805 | 1,85,949 | 45 | 2,23,856 | 333 | 19 |
| 13 | மதுரை | 4,48,409 | 2,58,774 | 58 | 1,89,635 | 420 | 65 |
| 14 | மயிலாடுதுறை | 2,02,657 | 1,35,503 | 67 | 67,154 | 241 | 17 |
| 15 | நாகப்பட்டினம் | 1,57,427 | 15,397 | 10 | 1,42,030 | 193 | 0 |
| 16 | நாமக்கல் | 3,51,839 | 2,85,618 | 81 | 66,221 | 322 | 77 |
| 17 | நீலகிரி | 96,970 | 50,257 | 52 | 46,713 | 35 | 1 |
| 18 | பெரம்பலூர் | 1,48,348 | 67,710 | 46 | 80,638 | 121 | 29 |

| வ.எண் | மாவட்டம் | மொத்த வீடுகள் | வீட்டுக் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டவை | சதவீதம் % | வீட்டுக் குழாய் இணைப்புகள் வழங்கப்பட வேண்டியவை | மொத்த கிராம ஊராட்சிகள் | 100 % வீட்டிணைப்பு உள்ள கிராம ஊராட்சிகள் |
|---|---|---|---|---|---|---|---|
| 19 | புதுக்கோட்டை | 3,70,666 | 1,56,902 | 42 | 2,13,764 | 497 | 17 |
| 20 | ராமநாதபுரம் | 3,33,423 | 75,759 | 23 | 2,57,664 | 429 | 2 |
| 21 | ராணிப்பேட்டை | 1,89,334 | 1,89,334 | 100 | 0 | 288 | 288 |
| 22 | சேலம் | 6,49,977 | 4,47,448 | 69 | 2,02,529 | 385 | 69 |
| 23 | சிவகங்கை | 3,32,507 | 1,15,185 | 35 | 2,17,322 | 445 | 8 |
| 24 | தென்காசி | 3,41,728 | 1,94,304 | 57 | 1,47,424 | 221 | 62 |
| 25 | தஞ்சாவூர் | 4,22,759 | 3,36,419 | 80 | 86,340 | 589 | 228 |
| 26 | தேனி | 1,85,664 | 1,42,161 | 77 | 43,503 | 130 | 41 |
| 27 | தூத்துக்குடி | 3,75,139 | 1,98,802 | 53 | 1,76,337 | 403 | 123 |
| 28 | திருச்சிராப்பள்ளி | 4,72,472 | 3,78,107 | 80 | 94,365 | 404 | 92 |
| 29 | திருநெல்வேலி | 2,86,263 | 1,61,721 | 56 | 1,24,542 | 204 | 42 |
| 30 | திருப்பத்தூர் | 2,16,132 | 1,20,326 | 56 | 95,806 | 208 | 11 |
| 31 | திருப்பூர் | 4,57,456 | 3,34,246 | 73 | 1,23,210 | 265 | 26 |
| 32 | திருவள்ளூர் | 4,76,152 | 4,09,857 | 86 | 66,295 | 526 | 65 |
| 33 | திருவண்ணாமலை | 5,31,110 | 3,56,293 | 67 | 1,74,817 | 860 | 386 |
| 34 | திருவாரூர் | 3,05,459 | 1,83,698 | 60 | 1,21,761 | 430 | 24 |
| 35 | வேலூர் | 2,12,528 | 1,92,767 | 91 | 19,761 | 247 | 96 |
| 36 | விழுப்புரம் | 4,40,530 | 2,10,723 | 48 | 2,29,807 | 688 | 87 |
| 37 | விருதுநகர் | 4,72,647 | 1,65,492 | 35 | 3,07,155 | 450 | 133 |
| | **மொத்தம்** | **1,25,51,525** | **77,13,647** | **61** | **48,37,878** | **12,525** | **2,849** |



### 6.13.10 செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பணிகளின் விவரம்

மாநிலத்தில் உள்ள அனைத்து கிராமங்களையும் நீடித்த நிலையான ஆற்று நீரினை ஆதாரமாக கொண்ட கூட்டுக் குடிநீர் திட்டங்கள் மூலம் இணைப்பது தமிழ்நாடு அரசின் தொலைநோக்கமாக உள்ளது.

தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளில் 48.38 இலட்சம் வீட்டுக் குழாய் இணைப்புகள் வழங்கும் வகையில் ரூ.18,228.38 கோடி மதிப்பீட்டில், 45 புதிய கூட்டுக் குடிநீர் திட்டங்கள், 56 கூட்டுக் குடிநீர் திட்டங்களை மறுசீரமைப்பு செய்தல் மற்றும் ஒற்றை கிராமத் திட்டங்கள் செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதுவரை 27 புதிய கூட்டுக் குடிநீர் திட்டங்கள், பராமரிப்பிலுள்ள 48 கூட்டுக் குடிநீர் திட்டங்களை மறுசீரமைப்பு செய்தல், மற்றும் அனைத்து ஒற்றை கிராமத் திட்டங்களுக்கும் பணி ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. மீதம் உள்ள பணிகளுக்கு பணி ஆணைகள் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேற்கண்ட திட்டங்களை செயல்படுத்தி அவற்றின் மூலம் 26.03 இலட்சம் வீடுகளுக்கு குழாய் இணைப்புகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

### 6.13.11 விருதுகள்

மாண்புமிகு இந்திய குடியரசு தலைவர் அவர்களால், ஜல் ஜீவன் திட்டத்தில் குடிநீர் குழாய் இணைப்புகள் அளித்து, தரமான பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கி வருவதற்கு 'செயல்பாட்டு மதிப்பீடு – 2022' அடிப்படையில், தமிழ்நாட்டிற்கு **'முதல் பரிசு'** வழங்கப்பட்டது.

ஒன்றிய அரசின் இச்செயல்பாட்டு மதிப்பீட்டு அறிக்கையின்படி, தமிழ்நாட்டின் ஊரக பகுதிகளில் வீடுகளுக்கு வழங்கப்படும் குடிநீர் அளவு, முறைமை மற்றும் தரம் ஆகியவை முறையே 94%, 93% மற்றும் 97% ஆகும்.